**செய்தி வெளியீடு எண்: 671** **நாள்: 9.11.12**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.11.2012) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு காவல்துறையின் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணிக்காகவும், சென்னை மாநகர காவல் பணிக்காகவும் 24 கோடியே 91 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 238 ரோந்து வாகனங்களை காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காவல்துறையின் நெடுஞ்சாலை ரோந்து பணிகளை மேம்படுத்துவதற்காக தேசிய நெடுஞ்சாலை ரோந்து பணிக்காக 69 வாகனங்கள், மாநில நெடுஞ்சாலை ரோந்து பணிக்காக 69 வாகனங்கள் என மொத்தம் 138 ரோந்து வாகனங்கள் வாங்கிட உத்தரவிட்டிருந்தார்கள். மேலும், சென்னை மாநகர காவல்துறை பணிகளை மேம்படுத்துவதற்காக 100 ரோந்து வாகனங்கள் வாங்கவும் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு காவல்துறையின் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணிக்காகவும், சென்னை மாநகர காவல் பணிக்காகவும், 90 செவர்லே டவேரா வாகனங்கள், 48 டாடா கிராண்டி வாகனங்கள், 100 டோயோட்டா இன்னோவா வாகனங்கள், என மொத்தம் 24 கோடியே 91 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 238 ரோந்து வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காவல்துறையினரின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

இந்த விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை மாநகர காவல்துறை ஆணையர், காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 9.11.2012